பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**08 02 2026** **SUNDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நக்சலைட் பிரச்சினைக்கு அடுத்த மாத இறுதிக்குள் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

2. அமெரிக்கா உடனான வர்த்தக ஒப்பந்தத்தில் நாட்டு நலன்கள் பாதுகாக்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.

3. மத்திய பட்ஜெட் அடுத்த 25 ஆண்டுகளுக்கான தொலைநோக்கு பார்வையுடன் தயாரிக்கப்பட்டுள்ளதாக மின்துறை அமைச்சர் திரு மனோகர்லால் கூறியுள்ளார்.

4. மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி வெற்றிபெறும் என்று அக்கட்சி நம்பிக்கை தெரிவித்துள்ளது.

5. ஆசிய உள் அரங்கு தடகள போட்டிகளில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

-இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>

நக்சலைட் பிரச்சினைக்கு அடுத்த மாத இறுதிக்குள் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

இன்று ராய்பூரில் நக்சலைட் பிரச்சினை தொடர்பாக நடைபெற்ற உயர்நிலை ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

நக்சலைட் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கட்டமைப்பு வசதிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இதற்கு உரிய பலன் கிடைத்துள்ளதாகவும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<>>>>>

இந்தியா முன்எப்போதும் இல்லாத அளவிற்கு தன்னம்பிக்கையுடனும், வலிமையுடனும் பிற நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதில் வர்த்தக ஒப்பந்தங்கள் முக்கிய பங்கு வகிக்கும் என்றார்.

அமெரிக்கா உடனான வர்த்தக ஒப்பந்தம் காரணமாக, விவசாயிகள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்றும் திரு பியூஷ் கோயல் திட்டவட்டமாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>

அமெரிக்கா உடனான வர்த்தக ஒப்பந்தத்தில் நாட்டு நலன்கள் பாதுகாக்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால் கூறியுள்ளார்.

உத்தரப்பிரதேசத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த ஒப்பந்தம் குறித்து மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் நாடாளுமன்றங்களின் இரு அவைகளிலும் அறிக்கை தாக்கல் செய்து பேசியதை சுட்டிக்காட்டினார்.

அதில் இந்த ஒப்பந்தம் தொடர்பான முக்கிய அம்சங்களை திரு பியூஷ் கோயல் எடுத்துரைத்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மத்திய பட்ஜெட் அடுத்த 25 ஆண்டுகளுக்கான தொலைநோக்கு பார்வையுடன் தயாரிக்கப்பட்டுள்ளதாக மின்துறை அமைச்சர் திரு மனோகர்லால் கூறியுள்ளார்.

இன்று ராய்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரிய கனிமங்களுக்கான சுங்கவரி ரத்து செய்யப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

இது சட்டீஸ்கரின் தொழில் வளர்ச்சிக்கு உதவிடும் என்று அவர் கூறினார்.

நாட்டின் வளர்ச்சிக்கு இந்த பட்ஜெட் கூடுதல் உத்வேகம் அளிக்கும் என்றும் திரு மனோகர்லால் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில், மத்திய பட்ஜெட் உள்ளதாக கலாச்சாரத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார.

சிம்லாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதற்கு இந்த பட்ஜெட் உத்வேகம் அளிக்கும் என்று குறிப்பிட்டார்.

சர்வதேச அளவில் பொருளாதாரத்தில் தேக்கநிலை காணப்பட்ட போதிலும், நாடு விரைவான வளர்ச்சியை கண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

மத்திய அரசு பின்பற்றி வரும் பொருளாதார கொள்கைகளே இதற்கு காரணம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

வருமான வரி தொடர்பான வரைவு நெறிமுறைகள் மற்றும் விண்ணப்பங்கள் குறித்து பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்குமாறு மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

வருமான வரித்துறை இணையதளத்தில் வரும் 22-ஆம் தேதிவரை கருத்துகளை பதிவு செய்யலாம் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

சுகாதார கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக ஆயுஷ் துறை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

மகாராஷ்ட்ரா மாநிலம் சத்ரபதி Sambhajinagar-ல் இன்று ஆயுஷ் நல்வாழ்வு மையத்தை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இருப்பதாகவும், இதன் காரணமாக ஆயுஷ் சிகிச்சை மையங்கள் விரிவாக்கம் செய்யப்பட்டு வருவதாகவும் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மத்திய அரசு சீர்திருத்த நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக ஊரக வளர்ச்சித்துறை இணையமைச்சர் டாக்டர் பெம்மசாணி சந்திரசேகர் கூறியுள்ளார்.

இன்று விசாகப்பட்டினத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட்டில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், எதிர்காலத்திற்கான சீர்திருத்த நடவடிக்கைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பாதுகாப்புத்துறைக்கான ஒதுக்கீடு 21 சதவீதம் அதிகரிக்கப்பட்டு இருப்பதாகவும் அவர் கூறினார்.

உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் பாதுகாப்பு தளவாடங்களை கொள்முதல் செய்வதற்கு கூடுதல் முக்கியத்துவம்

அளிக்கப்பட்டுள்ளதாகவும் டாக்டர் பெம்மசாணி சந்திரசேகர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

**Seychelles** அதிபர் டாக்டர் **Patrick Herminie** நடத்திய பேச்சுக்கள் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக மகாராஷ்ட்ரா முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் கூறியுள்ளார்.

இன்று மும்வையில் **Seychelles** அதிபருடன் நடத்திய பேச்சுக்களுக்கு பின்னர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கடல்சார் நிர்வாகத்தில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக திரு தேவேந்திர பட்நவிஸ் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

பீகாரில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான பணிகளுக்கு தமது அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு நிதிஷ்குமார் கூறியுள்ளார்.

இன்று சாலை கட்டமைப்பு மேம்பாட்டுப்பணிகளை ஆய்வு செய்த பின்னர் சமூக வலைதளத்தில் அவர் இக்கருத்தை பதிவு செய்துள்ளார்.

சாலை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் ஊரக பகுதிகளின் பொருளாதார வளர்ச்சி மேம்படும் என்றும் திரு நிதிஷ்குமார் தெரிவித்தார்.

<<<<<>>>>>

உத்தரப்பிரதேசத்தில் வரும் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை சட்டப்பேரவையில் வரும் 11-ஆம் தேதி தாக்கல் செய்யப்பட உள்ளதாக அம்மாநில துணை முதலமைச்சர் திரு கே பி மொளரியா கூறியுள்ளார்.

லக்னோவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் இந்த பட்ஜெட் அமையும் என்றார்.

உத்தரப்பிரதேச சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடர் நாளை தொடங்கவுள்ளதையும் கே பி மொளரியா சுட்டிக்காட்டினார்.

<<<<<>>>>>

ஹரியானா அரசு கல்வித்துறையின் வளர்ச்சியில் தனிகவனம் செலுத்தி வருவதாக அம்மாநில தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு **Rao Narbir Singh** கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நாட்டின் வளர்ச்சியில் கல்வித்துறை முக்கிய பங்கு வகிப்பதாக தெரிவித்துள்ளார்.

கல்வித்துறையின் வளர்ச்சிக்காக ஹரியானா அரசு பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை செயல்படுத்தி உள்ளதாகவும் திரு **Rao Narbir Singh** கூறியுள்ளார்.

<<<<<>>>>>

மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி வெற்றிபெறும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு **Suvendu Adhikari** நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், 15 ஆண்டுகால திரிணாமுல் காங்கிரஸ் அரசுக்கு இந்த தேர்தலில் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றார்.

<<<<<>>>>>

அஸ்ஸாம் மாநில காங்கிரஸ் தலைவர் திரு கௌரவ் கோகோய்கு பாகிஸ்தானுடன் தொடர்பு உள்ளதாக கூறப்படுவது குறித்த விவகாரத்தை மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்புவது என அஸ்ஸாம் அரசு முடிவு செய்துள்ளது.

இன்று குவஹாத்தியில் செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா, இது குறித்து மாநில அரசு சிறப்பு விசாரணைக்குழு அமைத்திருந்த நிலையில், பிரச்சினையின் முக்கியத்துவத்தை கருத்தில்கொண்டு மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு மாற்றப்படுவதாக தெரிவித்தார்.

இதற்கிடையே, தம்மீதான குற்றச்சாட்டுகள் தவறானவை என்று திரு கௌரவ் கோகோய் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

அரசியல் காரணங்களுக்காகவும், சுய லாபத்திற்காகவும்தான் சாதிய பாகுபாடுகள் நீடிப்பதாக ஆர் எஸ் எஸ் தலைவர் திரு மோகன்பக்வத் கூறியுள்ளார்.

இன்று மும்பையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அரசியல்வாதிகள் சாதி அடிப்படையில் வாக்குகளை சேகரிப்பதாக குறிப்பிட்டார்.

கொள்கைகளை பின்பற்றாமல், அரசியல்வாதிகள் சாதிக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகவும் திரு மோகன் பக்வத் கூறினார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய உள் அரங்கு தடகள போட்டிகளில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

சீனாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் **Heptathlon** பிரிவில் **Tejaswin Shankar** தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் உயரம் தாண்டுதலில் பூஜா சிங்கும், ஆடவர் குண்டு எறிதலில் **Tajanderpal Singh Toor-**ம் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

மகளிர் நீளம் தாண்டுதலில் **Ancy Sojan** வெண்கலப்பதக்கம் வென்றார்.

-----------------

**Zagreb** ஓபன் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் மனிஷா தங்கப்பதக்கத்தையும், சேத்தன் வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

--------------------

பெங்களூருவில் நடைபெற்றுவரும் நெதர்லாந்துக்கு எதிரான டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டி தகுதி சுற்றில் இந்தியா **2-1** என்ற ஆட்டக்கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

------------------

**19** வயதுக்கு உட்பட்டோருக்கான உலக கிரிக்கெட் கோப்பையை வென்ற இந்திய அணி, இன்று நாடு திரும்பியது.

மும்பை விமான நிலையத்தில் இந்திய அணியினருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

---------------

ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Gurpreet Singh** தங்கப்பதக்கம் வென்றார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் **25** மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்பிரிவில் **Harsh Gupta** வெள்ளிப்பதக்கத்தையும், **Amanpreet Singh** வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

-------------

அஜர்பைஜான் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

**மகளிர் ஒற்றையர் பிரிவில் Devika Sihag தங்கப்பதக்கத்தையும், Navya Kanderi வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.**

**கலப்பு இரட்டையர் பிரிவில் ராதிகா சர்மா — சாத்விக் ரெட்டி இணை தங்கப்பதக்கம் வென்றது.**

**<<<<<<END>>>>>>**